MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR M/S. GREAT EASTERN ENERGY CORPORATION LIMITED., FOR ITS PROPOSED PROJECT "THE MANNARGUDI COAL BED METHANE (CBM) BLOCK" IN THANJAVUR DISTRICT – EXPLORATION WELLS AND COMMERCIAL EXPLOITATION OF METHANE IN KUMBAKONAM, THIRUVIDAIMARUDUR AND ORATHANADU TALUKS HELD ON 29-12-2011 AT GRIEVENACE DAY PETITION HALL, DISTRICT COLLECTOR OFFICE, THANJAVUR.

Present:-

1. District Collector, Thanjavur.

2. District Revenue Officer, Thanjavur

3. District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Thanjavur.
4. Project Proponents.
5. No. of Public Participants: 65 (Copy of attendance enclosed)

The District Collector presided over the public hearing meeting. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thanjavur welcomed the gathering and requested the Project Proponents to explain the project.

The project proponent explained the project through Power point presentation covering all the details of the company and projects features.

Subsequent to this, District Environmental Engineer requested the public to express their views.

**VIEWS EXPRESSED BY THE PUBLIC ARE AS FOLLOWS:-**

**1) Mr. M. Vinod, Perapadi:** He expressed his concern about the problem arises during drilling of bore well and the remedial action to be taken by the Company.

Company explained that all precautionary measures will be taken for drilling work, and the operating pressures are very low as compared to conventional oil and gas development. So no problem will arise to the public due to this project. In case of any unforeseen eventuality, before commissioning the plant, an on site emergency plan would be prepared and kept ready in the site. It may be however noted that CBM exploration and development is a very safe activity throughout the world and there have been no major accidents reported due to this drilling activity.

**2) Mr. Ravi, Nachiarkovil:** informed that at present, lot of tiny industries are existing in our area. Whether there is any possibility for affecting these existing tiny industries due to this project.

Company explained that this is an exploratory project only and there is no problem for existing industries. Further during the operation period, the local villagers will get employment opportunities and Methane gas will be available at low cost to the existing tiny industries.

**3) Mr. Elangovan, Nachiarkovil:** expressed his concern about the depletion of ground water level.

Company assured that there will not be any chance for depletion of ground water level. Just they will put their core hole/ test well below 180 mts, which is beyond the ground water bore wells on the coal bed to explore the methane. There will not be any ground water extraction for this project and also there will not be any problem to the neighbouring land owners.

He also raised his doubt whether after completion of the core hole / test well, will be closed or not.

It was clarified that all unsuccessful test wells would be plugged using special cement and thereafter the entire area would be cleaned and restored to original status as far as possible. This is being regulated by Ministry of Petroleum and Natural Gas (MoPNG)/ Directorate General of Hydrocarbons (DGH).

**4) Mr. Kaspar, Vittalur:** He enquired about possibility of problems arising due to this project in future.

Company told that no issue will come up in future, considering that the project would comply with all norms specified by the relevant regulatory agencies from time to time, as well as proactive management of Environment, Health and Safety. The project area would in fact benefit from the availability of Methane gas, as an alternative and environmentally superior fuel, which would boost the local economy, as well as provide an alternative source of livelihood to the locals, besides agriculture.

**5) Mr. Veeramani, Kulamangalam:** He asked while exploiting the gas from 200 mts below ground level, is there any chance for depletion of ground water level.

Company explained their process and clarified his doubt, that the ground water being abstracted for agricultural and other purposes are from shallow levels through sand aquifers, typically at relatively shallow depths. The project would dewater from lignite along with gas and this would be located at deeper depths below the sand aquifers.

He raised a query about the laying of roads through agriculture lands for the heavy vehicle traffic movement for the project and whether it will affect the agriculture lands.

Company explained that all the proposed locations were identified near the existing road and no new roads would be formed inside the agriculture lands and also there is a plan for strengthening the existing roads to suit the movement of heavy vehicles before using for traffic.

**6) Mr. Paulraj, Kulamangalam:** Regarding Safety he asked whether any District Authorities are available at site and also any safety measures will be taken during drilling core hole / test well etc. Whether any employment opportunity will be given to local people.

He has been informed that regarding safety all precautionary measures will be taken as per the guidelines issued by Oil Industry Safety Directorate and Directorate General of Mines Safety. Environmental aspects will be taken care by Tamil Nadu Pollution Control Board.

Company assured that this is preliminary project only, and when then explore the gas, they will give employment opportunity to the local people according to their experience and qualification.

Also Mr. Paulraj expressed that he was not aware of the proposed project. He came to know about the Public Hearing only through news paper and the meeting should be conducted at every panchayat level.

District Environmental Engineer, replied that the EIA Report and executive summary reports are kept available in the concerned Panchayat Union offices. All clarifications will be done by TNPCB. He also informed that this is only a preliminary / testing project, for next development phase all the project details will be made available at Panchayat level as per the request.

**7) Mr. Rajanand, Payngnadu:** He expressed his support for this project and also he informed that the land owners and the villagers will get benefited due to this project.

**8) Mr. Rahul, Perapadi:** He raised his doubt whether they can continue the agriculture works near the core hole / test well area.

The company replied that there is no problem in continuing the agriculture operation near the core hole/ test well areas and all the core hole/test wells will be located 100 mts away from the existing residential houses.

**9) Mr. Manikandan, Perapadi:** He enquired about the disposal of waste water, duration of the project, and the possibility of cracks in the houses due to this project.

The company replied that waste water would be disposed off after meeting requirements of TNPCB. Drilling operations would be done round the clock. A core/test well requires 10-15 days to complete the operations. No cracks will develop in the houses since drilling operations would be done more than 100 m from residential houses.

District Collector told that though this is a preliminary project, the Company should have in mind that majority of the people in this district depend only on agriculture for their income. So all precautionary steps should be taken to safe guard agriculture lands, ground water and residential areas. The project proponents assured the District Collector and Local Administration that they will keep his valuable guidance in mind and ensure that they do not harm the agriculture lands in any way.

Summing up the Public Hearing proceedings, District Collector stated that all the issues raised by the public have been recorded and will be submitted to the MoEF, Government of India for further process.

At the end of the meeting District Environmental Engineer delivered vote of thanks to the gatherings and the meeting came to an end.

- /Sd/-
DISTRICT COLLECTOR,
THANJAVUR

/True copy/

District Environmental Engineer (A/c),
TNPCB/Thanjavur.

29-12-2011 அன்று மாலை 04.30 மணியளவில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலகத்தில் உள்ள பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கில், புதிதாக தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் "மன்னார்குடி நிலக்கரி படுகை மீத்தேன் (CBM) மண்டலத்தில்" மீத்தேன் வாயுவை சோதனைக் குழாய்க் கிணறுகளில் தேடுதல் சோதனை மற்றும் வணிக ரீதியான உபயோகம் பற்றி தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் திருவிடைமருதூர் மற்றும் ஒரத்தநாடு வட்டங்களில் ஆய்வு செய்தல் தொடர்பாக நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புரைக் கூட்ட நடவடிக்கைகள்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

1. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்,
2. மாவட்ட வருவாய் அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்,
3. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர்.
4. திட்ட உரிமையாளர்கள் மற்றும்
5. பொது மக்கள் - 65 பேர் (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

இக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார், கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் அவர்கள் வரவேற்று திட்ட உரிமையாளரை புதிதாக அமைக்கப்படவுள்ள திட்டம் குறித்த விளக்கத்தினை பவர் பாயிண்ட் (Power Point Presentation) மூலம் விளக்குமாறு கேட்டுக் கொண்டார். பின் இந்த நிறுவனத்தின் தொழில் நுட்ப ஆலோசகர் உத்தேசித்துள்ள திட்ட விபரங்களை விரிவாக "Power Point Presentation" மூலமாக விளக்கினார். அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களிடம் திட்டம் தொடர்பான தங்களது கருத்துக்களையும் சந்தேகங்களையும் எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பொதுமக்கள் எழுப்பிய வினாக்களும் அதற்குண்டான விளக்கங்களும் கீழ்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

1) **திரு. வினோத், பெரப்பாடி**

ஆழ்துளை கிணறு போடும்பொழுது ஏதேனும் பிரச்சினைகள் வந்தால் நிர்வாகம் எந்த விதமான நடவடிக்கைகளை எடுக்கும் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு திட்ட உறுப்பினர் ஆழ்துளை கிணறு துளையிடும்போது அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் குறைந்த அழுத்தமுள்ள மீத்தேன் வாயுவை இத்திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட உள்ளதால் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவித்தார். திட்டம் தொடங்கும் முன்பே எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்வுகளுக்காக அவசரகால நடவடிக்கை திட்டம் ஏற்படுத்தி தயார் நிலையில் வைக்கப்படும். மேலும், நிலக்கரி படுகையிலிருந்து மீத்தேன் எடுக்கும் பணி மிகவும் பாதுகாப்பானது மற்றும் உலகளாவிய நிலக்கரி படுகை மீத்தேன் எடுக்கும் பணியில் எந்தவிதமான அசம்பாவிதமும் இதுவரை ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

**2) திரு. ரவி, நாச்சியார்கோவில்**

நாச்சியார்கோவிலில் பல சிறு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த புதிய திட்டத்தினால் ஏதாவது பாதிப்பு வருமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு திட்ட உறுப்பினர் இந்த திட்டத்தினால் இயங்கி கொண்டிருக்கும் தொழிற்சாலைகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. மேலும் இத்திட்டத்தினால் எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் பெருகும் என்றும், இச்சிறு தொழிற்சாலைகளுக்கு இயற்கை எரிவாயு மலிவாக கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அதனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்று தெரிவித்தார்.

**3) திரு. இளங்கோவன், நாச்சியார்கோவில்**

இத்திட்டத்தினால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு, நிலத்தடி நீர் குறைய வாய்ப்பில்லை. ஏனென்றால் ஆழ்துளை கிணறு 180 மீ ஆழத்திற்கும் அதிகமாக அதாவது நிலத்தடி நீர் தற்போது எடுக்கப்படும் பகுதியை தாண்டி துளையிடப்படும். நிலத்தடி நீர் இத்திட்டத்திற்காக ஏதும் எடுக்கப்படவில்லை. அதனால் சுற்றி உள்ள விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனத் திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

ஆழ்துளை கிணறு துளையிட்ட பிறகு அது மூடப்படுமா? அல்லது திறந்துள்ள நிலையிலேயே இருக்குமா? என கேள்வி எழுப்பினார்.

இயற்கை எரிவாயு கிடைக்காத ஆழ்துளை கிணறுகள் அனைத்தும் சிறப்பு தகுதி பெற்ற சிமெண்ட் மூலம் அடைக்கப்படும் மேலும் அந்த இடத்தை சுத்தப்படுத்தி பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சகம் இந்த நடவடிக்கையை ஒரு நிபந்தனையாகவே விதித்துள்ளது எனத் திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

**4) திரு. கஸ்பார், விட்டலூர்.**

இத்திட்டத்தினால் வருங்காலத்தில் எந்த மாதிரி பிரச்சினைகள் ஏற்படும் எனக் கேள்வி எழுப்பினார்.

இத்திட்டத்தினால் வருங்காலத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் திட்டம் தொடங்குவதற்கு அனைத்து அரசாங்க விதிகளும் பின்பற்றப்படும் என்றும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அனைத்து சார்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். இத்திட்டத்தில் உருவாகும் இயற்கை எரிவாயு சுற்றுச்சூழலுக்கு உகந்தது எனவும்

இதனால் பொதுமக்களுக்கு பொருளாதார ஏற்றம் கிடைக்கும் எனவும் திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

**5) திரு. வீரமணி, குலமங்கலம்.**

200 மீ ஆழத்திற்கு கீழே எரிவாயு எடுப்பதால் நிலத்தடி நீர் குறைய வாய்ப்பு உள்ளதா என கேள்வி எழுப்பினார்.

விவசாயம் மற்றும் மற்ற தேவைகளுக்கு நிலத்தடி நீர் குறைந்த ஆழத்திலே உள்ள மணல் படுகைகளிலிருந்து எடுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு அதிகம் ஆழமுள்ள நிலக்கரி படுகைகளிலிருந்து எரிவாயுவுடன் தண்ணீரும் எடுக்கப்படும். இந்த நிலக்கரி படுகை மணல் படுகைகளிலிருந்து அதிக ஆழத்தில் அமைந்திருக்கும். அதனால் நிலத்தடி நீர் குறைய வாய்ப்பில்லை எனத் திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு கனரக வாகனங்கள் செல்வதற்காக சாலை அமைப்பதனால் விவசாய நிலங்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமா? எனக் கேள்வி எழுப்பினார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகளும் தற்பொழுது உபயோகத்தில் உள்ள சாலை அருகிலேயே அமைய உள்ளது. அதனால் புதிதாக விவசாய நிலங்களில் சாலை ஏதும் அமைக்கப்படாது. மேலும் தற்போதுள்ள சாலைகள் கனரக வாகனங்கள் சென்று வருவதற்கு ஏதுவாக வலுவாக்கப்படும் என்று திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

6) **திரு. பால்ராஜ், குலமங்கலம்.**

ஆழ்துளை கிணறு துளையிடும் இடத்தில் மாவட்ட அதிகாரிகள் பாதுகாப்பிற்காக அந்த இடங்களில் இருப்பார்களா? உள்ளூர் மக்களுக்கு ஏதும் வேலை வாய்ப்பு கிடைக்குமா? என்று கேள்வி எழுப்பினார்.

ஆழ்துளை அமைக்கும் இடத்தில் பாதுகாப்பிற்காக எண்ணெய் நிறுவனங்களின் பாதுகாப்பு இயக்குநரகம் (Oil Industry Safety Directorate) மற்றும் சுரங்க பாதுகாப்பு இயக்குநரகம் (Directorate General of Mines Safety) தெரிவித்துள்ளபடி அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும், சுற்றுச்சூழல் பொறுத்தவரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கண்காணிக்கப்படும் என்று திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

தனக்கு இந்த திட்டத்தைப்பற்றி எதுவும் தெரியாது எனவும் பத்திரிக்கை வாயிலாக அறிந்து இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். இந்த கூட்டத்தை ஒவ்வொரு கிராம அளவிலும் நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை, நிர்வாக சுருக்க அறிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். தங்களுக்கு ஏதேனும் ஐயம் ஏற்பட்டால் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் விளக்கம் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் இத்திட்டத்தில் தொடக்க ஆய்வு மட்டுமே மேற்கொள்ள இருப்பதாகவும் அடுத்த கட்ட முன்னேற்ற நடவடிக்கைகளின்போது தங்களது விருப்பத்தின்படி கிராம அளவில் திட்ட நடவடிக்கை குறித்து விளக்கப்படும் என்று தெரிவித்தார்.

7) **திரு. ராஜானந்தம், பைங்காநாடு**

இத்திட்டம் செயல்படுத்தப்படுமேயானால் நில உரிமையாளர்களும் மற்றும் கிராம மக்களுக்கும் எதிர்காலத்தில் பெரிய அளவில் பயன் கிடைக்கும் என்று கூறினார்.

8) **திரு. ராகுல், பெரப்பாடி**

ஆழ்துளை கிணறு துளையிடும்போது அதற்கு அருகில் விவசாய பணிகளை மேற்கொள்ளலாமா?

ஆழ்துளை கிணறு அமைக்கும் இடத்திற்கு அருகில் விவசாயம் செய்வதால் எந்த பாதிப்பும் இருக்காது எனவும் ஆழ்துளை கிணறு பொதுமக்கள் வசிக்கும் வீடுகளிலிருந்து 100 மீ தொலைவிற்கு அப்பால்தான் செயல்படுத்தப்படும் என்று திட்ட உறுப்பினர் தெரிவித்தார்.

**9) திரு. மணிகண்டன், பெரப்பாடி**

இத்திட்டத்தினால் உருவாகும் கழிவுநீர் எவ்வாறு வெளியேற்றப்படும் என்றும் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் வேலை நடைபெறும் மற்றும் வீடுகளில் ஏதேனும் விரிசல்கள் ஏற்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு திட்ட உறுப்பினர் ஆழ்துளை கிணறு அமைக்கும்போது வெளியேறும் கழிவுநீர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதித்துள்ள விதிகளுக்குட்பட்டு வெளியேற்றப்படும் என்றும் மேலும் 24 மணி நேரமும் ஆழ்துளை கிணறு துளையிடும் பணி செயல்படும் என்று தெரிவித்தார். ஒரு ஆழ்துளை கிணறு துளையிட்டு முடிக்க சுமார் 10 முதல் 15 நாட்களாகும் என்பதையும் தெரிவித்தார். ஆழ்துளை கிணறு பொதுமக்கள் வசிப்பிடங்களிலிருந்து குறைந்தபட்சம் 100 மீட்டர் இடைவெளிக்கு அப்பால் துளையிடுவதால் வீடுகளில் எவ்வித விரிசலும் ஏற்பட வாய்ப்பில்லை என்று தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்த திட்டம் தொடக்க நிலையில் இருந்தாலும், நிர்வாகத்தினர், இந்த மாவட்ட மக்கள் அனைவரும் முழுமையாக விவசாயம் சார்ந்த தொழில்களையே நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்து அதன்படி விவசாய நிலங்களுக்கும், விவசாயத்திற்கும், நிலத்தடி நீர் மற்றும் குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் திட்டத்தை நடத்துமாறு அறிவுரை வழங்கினார்கள். திட்ட நிர்வாகத்தினரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மேலான அறிவுரையை தாங்கள் கருத்தில் கொண்டு விவசாய நிலங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் திட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

முடிவாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் எழுப்பிய அனைத்து வினாக்களும் சந்தேகங்களும் பதிவு செய்யப்பட்டு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்று பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

கூட்டத்தின் முடிவாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே முடிவடைந்தது.

--ஒப்பம்--
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர் மாவட்டம்,
தஞ்சாவூர்

/உண்மை நகல்/

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தஞ்சாவூர்.